<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, செங்கல்பட்டு</u>

**<u>CC No.157/2023</u>**

எதிரி ஆஜர்.

அ.சா.– 1 திருமதி. கன்னிகா க/பெ. எல்லப்பன் நாள்–24.02.2025.

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை–

எனக்கு சம்பவத்தை பற்றி நேரடியாக தெரியாது தகவல் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். எனக்கு தகவல் கிடைத்தவுடன் நான், முருகன், மகேந்திரன், சுப்பிரமணி, சண்முகம், பாக்கியராஜ், ஜெய்சங்கர், இசைமுத்தன் ஆகியோர்களுடன் காவல் நிலையத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். அங்கு என்னை போலிசார் விசாரித்த பிறகு கையொப்பம் போட சொன்னதால் கையொப்பம் போட்டேன் என்றால் சரிதான். அங்கு ஏட்டைய்யா எழுதி கொடுத்த புகாரில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் எனது முதல் விசாரணையில் கூறியுள்ள விவரத்தை நான் போலிசார் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

விபத்து நடந்த சாலை ஒரு வழி சாலை என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். சம்பவம் நடந்தது ரோட்டின் மையப்பகுதி என்றால் சரிதான். விபத்துக்குள்ளான இருசக்கர வாகனம் எனது கணவருக்கு சொந்தமானது அல்ல என்றால் சரிதான். அவருடைய நண்பருக்கு சொந்தமானது. எனது கணவர் வெல்டிங் வேலை செய்கிறார் என்றால் சரிதான். எனது கணவர் அவர் பணி காரணமாக அவ்வப்போது மது அருந்துவார் என்றால் சரிதான். பழையசீவரம், பாலூர், ஆத்தூர் ஆகிய பகுதிகளில் விற்கப்படும் மதுவினை எனது கணவர் வாங்கி அருந்துவார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. விபதது நடந்த சாலை அங்கிருக்கும் பழையசீவரம் மலையை உடைத்து மணல் எடுக்கப்படுவதால் அந்த பகுதியில் லாரிகள் அதிகமாக சென்று கொண்டிருக்கும் என்றால் சரிதான். எனது கணவருக்கு இருசக்கர வாகனம் ஓட்ட தெரியாது என்றாலும், அவருக்கு லைசன்ஸ் இல்லையென்று சொன்னாலும் சரியல்ல. லைசன்ஸ் இருந்ததை நான் ஒருமுறை பார்த்துள்ளேன் அதற்கு பிறகு இருந்ததா என்பது தெரியாது. இந்த வழக்கிற்காக போலிசார் சொல்லி கொடுத்ததை நான் சாட்சியமாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

நான் எனது கணவர் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தை பார்த்தேனா என்றால் இல்லை லாரி மட்டும் காவல் நிலையத்தில் இருந்தது. அந்த வாகனத்தின் எண் எனக்கு தெரியாது என்று சொன்னால் இருசக்கர வாகனத்தில் எனது கணவர் என்னை அழைத்து செல்வதால் அந்த வாகனத்தின் எண் எனக்கு தெரியும். லாரி நிறுத்தி வைத்திருந்ததால் அதன் எண்ணும் எனக்கு தெரியும். எனது கணவர் மது அருந்திவிட்டு அந்த சாலையில் சென்ற வாகனங்களை ஓவர்டேக் செய்து ஓட்டி வந்ததால் எதிரில் வந்த லாரியில் வந்து விழுந்துள்ளார் என்றாலும், இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள லாரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லையென்றாலும், விபத்தை ஏற்படுத்திய வாகனமானது பஞ்சாயத்து தலைவரின் லாரி என்பதால் அதை மறைத்து எதிரி மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், அதற்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இருசக்கர வாகனத்தில் முன்பக்க சேதாரம் ஏற்பட்டதற்கு காரணம் எனது கணவர் ஓவர்டேக் செய்து வண்டியை ஓட்டி எதிரில் வந்த வாகனத்தின் முன் பக்கத்தில் மோதியது தான் காரணம் நான் சாட்சியம் அளித்துள்ளது போல இருசக்கர வாகனத்தின் பின்புறத்தில் எந்தவித சேதாரமும் ஏற்படவில்லையென்று சொன்னால் முன்பக்கம் எதுவும் வண்டி வரவில்லையென்று கூறினார்கள். நான் கூறிய வாகனத்திற்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லையென்று சொன்னால் சரியல்ல. நான் எனது கணவரின் இழப்பிற்கு நஷ்டஈடு பெற வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை –** இல்லை.

Sd.xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd. V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.

**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, செங்கல்பட்டு</u>**

**<u>CC No.157/2023</u>**

எதிரி ஆஜர்.

அ.சா.– 3 திரு. சுப்பிரமணி த/பெ. வெள்ளேரியன் நாள்–24.02.2025.

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை–

எனக்கு சம்பவத்தை பற்றி நேடியாக தெரியாது என்றாலும் தகவல் தெரிந்து தான் சென்றேன் என்றால் சரிதான். எனக்கு தகவல் கிடைத்தவுடன் நான், முருகன், மகேந்திரன், கன்னிகா, சண்முகம், பாக்கியராஜ், ஜெய்சங்கர், இசைமுத்தன் ஆகியோர்களுடன் காவல் நிலையத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். அங்கு எங்களை போலிசார் விசாரித்த பிறகு கையொப்பம் போட சொன்னதால் கையொப்பம் போட்டேன் என்றால் சரிதான். இறந்து போனவர் எனக்கு என்ன உறவுமுறை என்றால் மச்சான். இருசக்கர வாகனம் இறந்தவருக்கு ஒட்ட தெரியாது என்று சொன்னால் இல்லை ஓட்டுவார். அவருக்கு மது அருந்தும் பழக்கம் உண்டு என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவருக்கு வாகனம் ஓட்ட தெரியாது என்பதும், அவர் மது அருந்துவார் என்பதும் எனக்கு நன்கு தெரியும் என்று சொன்னால் அவர் மது அருந்தும் பழக்கம் எனக்கு தெரியாது.

பழையசீவரம் மலையை உடைத்து மணல் எடுக்கும் வேலை செய்து கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். அந்த மலையை உடைத்து மணல், கற்கல் ஆகியவற்றை நிறைய வாகனங்கள் ஏற்றி செல்லும் என்று சொன்னால் சரிதான். இறந்து போனவர் வெல்டிங் வேலை செய்பவர் என்றால் சரிதான். அவர் மேளச்சேரியில் கடை வைத்துள்ளார் என்றால் சரிதான். அவர் வேலை செய்யும் இடத்திலிருந்து பழையசீவரத்திற்கு எதற்காக சென்றார் என்று விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் அது தெரியாது. அவர் அன்றைய தினம் பழையசீவரத்திற்கு மது அருந்துவதற்காக சென்றுள்ளார் என்றாலும், அவ்வாறு சென்று திரும்பி வரும் போது அவர் வரும் வாகனங்களை ஓவர்டேக் செய்து செல்லும் போது எதிரில் வந்த டாடா ஏசி வாகனத்தில் மோதி விபதது ஏற்பட்டது என்றாலும், விபத்திற்கு காரணம் முழுக்க முழுக்க எனது மச்சான் என்று சொன்னால் சரியல்ல. விபத்து ஏற்படுத்திய வாகனம் பஞ்சாயத்து தலைவரின் வாகனம் என்பதால் அதை மறைப்பதற்காக அந்த பக்கமாக

வந்த சம்மந்தமமே இல்லாத வாகனத்தை இந்த வழக்கில் சேர்த்து அதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. விபத்து நடந்த சாலை ஒரு வழி சாலை என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் ரோட்டின் மையப்பகுதி என்றால் ரோட்டில் இடது பக்கத்தில் விபத்து ஏற்பட்டு வந்து விழுந்துள்ளார் லாரியின் அடியில் விழுந்துள்ளார். நான் கூறியது போல இடது பக்கத்தில் விபத்து ஏற்படவில்லையென்றாலும், அவ்வாறு ஏற்பட்டிருந்தால் மண் ரோட்டில் தான் விழுந்திருப்பார் என்றாலும், விபத்தானது வலது பக்கத்தில் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இறந்தவர் குடும்பம் ஏழ்மையான குடும்பம் என்பதால் அவருக்கு நஷ்டஈடு கோருவதற்காக சம்மந்தமே இல்லாத அவ்வழியாக வந்த வாகனத்தை வழக்கில் சேர்த்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை –** இல்லை.

Sd.xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd. V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.